[24th February 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தங்க நகைகளுக்குப் பதிலாக பித்தளை நகைகளையும், நல்ல அசல் வைரங்களை எடுத்துவிட்டுப் பதிலாக போலிக் கற்களையும் வைத்து அசல் நகைகளை கொண்டுபோய்விடுவதாக சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுபற்றிய தகவல் இல்லை, தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : அடிக்கடி கோவில்களில் சுவாமி விக்ரகங்களும், நகைகளும் திருட்டுப்போவதாகப் பத்திரிகையில் பார்க்கிறோம். இதைப்போல வேறு கோவில்களில் உள்ள விலையுயர்ந்த பொருள்கள், ஆபரணங்கள், திருட்டுப்போகாமல் இருக்க அரசாங்கம் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இனிமேல் உறுப்பினர்கள் யோசனையின் பேரில் பரிசீலனை செய்யப்படும்.

Fly ash excreted by Thermal Stations

* 36 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the use of the fly ash excerted from the thermal power stations in Tamil Nadu;

(*b*) the places where the ash is dumped; and

(*c*) the places where the fly ash will be dumped if 2,500 tonnes of fly ash is excreted from the proposed thermal power station at Ennore?

அனல் மின் நிலையங்களின் கழிவு சாம்பல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அனல் மின்சார நிலையங்களில் கழிவு பொருளான சாம்பலை என்ன உபயோகம் செய்கிறார்கள் ?

(இ) அவை எங்கெங்கு கொட்டப்படுகிறது ?

(உ) எண்ணூரில் அமையப்பட இருக்கும் அனல் மின் நிலையத்தின் சாம்பல் நாளொன்றுக்கு 2,500 டன் கழிவு பொருளை வெளியேற்றினால் அவை எங்கு கொட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்திலிருந்தும் சமயநல்லூர் மின்சார நிலையத்திலிருந்தும் கிடைக்கும் சாம்பலை, அண்மையிலுள்ள நீர் தேங்கி நிற்கும் தாழ்ந்த பகுதிகளின் நில மட்டத்தை உயர்த்துவதற்கும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும் மின்சார

வாரியம் பயன்படுத்துகிறது. ஊராட்சிகள், விடுகட்டிக் கொடுக்கும் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களுக்கும் இதே நோக்கத்திற்காக இந்தச் சாம்பல் கொடுக்கப்படுகிறது. மின்சார வாரியம் கட்டும் கட்டிடங்களில் செமிட்டிக்குப் பதிலாக இந்தச் சாம்பல் ஓரளவு பயன்படுத்தப்படுகிறது.

(உ) எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 1,200 முதல் 1,700 டன் சாம்பல் கிடைக்கும். இந்த அளவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தாங்கள் நிறுவ எண்ணியுள்ள புழை கற்கலவைத் தொழிற்சாலையில் (Cellular concrete factory) பயன்படுத்துவதற்காக நாள் தோறும் கிட்டத்தட்ட 300 முதல் 400 டன் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள சாம்பலில் ஒரு பகுதி தாழ்ந்த நிலப்பகுதிகளிலும் எஞ்சிய பகுதி கடலிலும் கொட்டப்படும்.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

II.—ANNOUNCEMENT *Re.* NOMINATION OF A MEMBER TO THE BUSINESS ADVISORY COMMITTEE

MR. CHAIRMAN: I have to announce to the House that under rule 166 (4) of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the Hon. Thiru P. U. Shanmugam, Minister for Labour, as a Member of the Business Advisory Committee for the year 1968–69.

III.—PRESENTATION OF THE SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1968-69.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இத்துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 25.18 கோடி ரூபாயாகும்; இதில் ஏறக்குறைய 6.08 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும்; எஞ்சிய சுமார் 19.10 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளின்பாற்படும். கடந்த ஆகஸ்ட் திங்களில் முதல் தொகுதித் துணை மதிப்பீடுகளை மன்றத்தின் முன் வைத்த பின்னர், அரசு ஒப்பளிப்பு வழங்கிய பெரும்பாலான "புதுப் பணித்" திட்டங்கள் இத்துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியக் கோரிக்கைகளின்கீழ் தற்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதால், அந்த மானியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் மிகப் பெரியதொரு நிதி ஒதுக்கம் மாநில மின்சார வாரியத்திற்குக் கடன் உதவியளிப்பதற்காக